REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 237

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரு. 24—0—0
6 மாதம்	ரு. 12—0—0
3 மாதம்	ரு. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு	ரு. 30—0—0
6 மாதம்	ரு. 15—0—0
3 மாதம்	ரு. 7—8—0

சென்னை: பங்குனி 5ஆ. வியாழன் (18—3—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 6உ வெள்ளி (19—3—54)

"வாழப் பிறந்தவனை வதைக்காதீர்!"

பழிவாங்கும்படலத்திற்கு பாதை அமைக்காதீர்!

'ஆஜர் உயர்வு' கொடிய நஞ்சாகும்!

"எதையும் தாங்கும் இதயம் கொள்வோம்' என ஆரம்ப ஆசிரியர்கள் எச்சரிக்கை

அம்பை, மார்ச் 18—

"'ஆஜர் உயர்வு என்னும் சோதனைப் புயல் நம்மை எதிர் நோக்குகின்றது; இப்போது நாம் வழும், கால் வயிறு வாழ்வையும் கவ்விக்கொண்டோடுமோ என ஐயம் அரும்புகின்றது; ஐயம் மட்டும் அல்ல—அரும்பியும் விட்டது; 'மூன்று மாத விலகுதல் அறிக்கை' சகிதம் இங்கு வந்திருக்கும் ஆசிரியர்களே அதற்குப் போதுமான சான்றாகும்; 'வாழ்வை வதைக்காதீர்'—என்று மன்றாடி வேண்டுகிறோம் அரசாங்கத்தை,"

என்று, 7—3—54-ல், அம்பை இந்து ஆரம்பப் பள்ளியில், அம்பைத் தாலுகா ஆரம்பாசிரியர் யூனியன் மகா சபைக் கூட்டம், யூனியன் தலைவர் திரு. எம். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது, சங்கச் செயலாளர் திரு ஜே. சின்னப்பன் அவர்கள் வரவேற்புரை வழங்குகையில் குறிப்பிட்டார்.

செயலாற்ற முனைவோம்

தலைவர் திரு. எம். கிருஷ்ணன் அவர்கள் கூறியதாவது:—

"கூட்டங்கள் கூடுவதாலும், உரைகள் வழங்குதல் மூலமாயும் பயன் காண முடியாது; செயலிலும் காட்டுவதுதான் சிறந்தது; ஆகையால், இப்போது நம் தலைக்கேறும் விஷமாகிய ஆஜர் உயர்வின் விளைவுகளை அரசியலாருக்கு எடுத்துக்கூற நம்மில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பி, தென்னிந்திய ஆசிரியர் சங்கத் தலைவர் ஒத்துழைப்புடன் முறையிடுவது நல்லது; அதன் பயனாகவாவது நலம் ஏற்படாதா என்று பார்ப்போம்" என்றார்.

மாளச் செய்ய மார்க்கம் வேண்டாம்!

அடுத்தாற்போல் யூனியன் உபதலைவர் திரு. நாகமணி அவர்கள், புதிய கல்வித் திட்டம் அளித்த வரப்பிரசாதமான 3 மாத விலகுதல் அறிக்கையோடு மேடைமீது தோன்றிய காட்சி ஒவ்வொரு ஆசிரியரின் கழுத்திற்கு மாட்டும் சுருக்குக் கயிறாகத் தோன்றியது. அவர் கூறினார்:—

"சோகத்தின் எல்லையில் வாழப் பிறந்தவனை மாளச் செய்ய ஒரு அரசாங்கம் முயற்சிக்குமானால், அதைத் தடுக்க எவ்வித தியாகமும் செய்து, எதையும் தாங்கும் இதயம் உள்ளவர்களாய், வாழ முயற்சி செய்வதே நல்லதோர் பாதை; ஆகவே, நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயலாற்றி, நல்லதோர் முடிவுகாண வேண்டுவதோடு, அரசாங்கத்தாரையும் பணிவோடு வேண்டுகிறேன்—வேண்டாம் எங்கள் மீது வஞ்சம்" என்றார்.

விளைவு—விபரீதமே!

திரு சந்திரசேகர ஐயர் அவர்கள் கூறியதாவது:—

"சராசரி ஆஜர் பழையபடியே இருத்தல் வேண்டும்; திடீர் உயர்வால் பல ஆசிரியர்கள் பழி வாங்கப்படுவார்கள்; இத்திட்டம் ஆசிரியர்களை பழி வாங்க சமைக்கப்பட்டதோ என ஐயுறும் அளவுக்கு உள்ளது; இதன் விளைவு எவ்வளவு தூரம் வருமோ?" என்றார்.

அலட்சியம் செய்யாதீர்!

திருமதி சிதம்பரம் அம்மையார் சொன்னதாவது:—

"பின்னடைந்த சமுதாயம்

(4-ம் பக்கம் பார்க்க)

பட்டம் தாணுவின் சகா மந்திரிகள்

திருவனந்தபுரம், மார்ச் 17—

திரு.—கொச்சி முதன் மந்திரி பட்டம் தாணுப்பிள்ளை ராஜப் பிரமுகரிடம் தமது மந்திரிகளின் ஜாபிதாவைச் சமர்ப்பித்தார். முதன் மந்திரியைச் சேர்த்து நால்வர் கொண்ட மந்திரி சபையாக அது இருக்கும்.

திரு. பி. எஸ். நடராச பிள்ளை, ஏ. அச்சுதன், பி. கே. குஞ்ஞு ஆகியோர் மந்திரி சபையில் புதிதாக இடம் பெற்றுள்ளனர். அவர்கள் அனைவரும் பி—சோ. கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் விசுவாசப் பிரமாணம் எடுத்துப் பதவி ஏற்றனர்.

பருத்தி பேல்கள் தீக்கிரை

பெல்லாரி, மார்ச் 17—

பெல்லாரி பஞ்சாலை பொன்றில் பொதியடிக்கும் அறையில் பருத்தி பேல்கள் அடியோடு எரிந்து சாம்பலாயின. தீ விபத்துக்குக் காரணம் தெரியவில்லை. நஷ்டம் மொத்தம் ரு 2 லட்சத்திற்கு இருக்கும்.

வாழ்க்கைப் போருக்கு வழி வகுக்காதீர்!

'ஆஜர் உயர்வு' ஆள் விரட்டும் படலமாகும்!

'அடிமை வாழ்வை அகற்ற வாரீர்' என ஆரம்ப ஆசிரியர்களுக்கு அழைப்பு

அருப்புக்கோட்டை, மார்ச் 18—

"கிராம மக்களிடையே ஓராண்டில் பெற்ற அனுபவம், பிள்ளைகள் குறைந்த நேரம் படிப்பதால் பெற்றோர்கள் அவ்வளவு தூரம் திருப்தியுற்றதாகத் தோன்றவில்லை; மேலும், பிள்ளைகளை அதிகமாகச் சேர்க்க ஆசிரியர்களுக்கு பொறுப்பு அளிக்கப்படுகிறது; எவ்வளவுதான் ஆசிரியர்கள் முயன்றாலும் அரசாங்கச் சட்டத்தின் மூலம்தான் அதை நிறைவேற்ற இயலும்."

"தற்போது மாணவர்கள் ஆஜர் எண்ணிக்கை சராசரி 20 என்பதை 30 ஆக உயர்த்தியும், அடுத்து அடுத்து மேலும் கூடுதலாகவும் நிபந்தனை ஏற்படுத்தப்பட்டுள்ளது; இதன்படி, இதுபோது பள்ளியில் வேலை பார்க்கும் 10 ஆசிரியர்களுக்குப் பதிலாக 5 பேர்கள்தான் வேலை பார்க்க இயலும்; மற்ற 5 பேர்களின் நிலை என்னாகும் என்பதுதான் பயங்கரமான ஆசிரியர்களின் வாழ்க்கைப் போராட்டமாகும். ஆசிரியர்களிடையே நன்னம்பிக்கை வேண்டும்; எங்காவது மானேஜ்மெண்டில் அடிமையாக வேலை பார்த்து சிரமம் அடைவதைவிட, தாங்களாகவே பள்ளியில்லாத கிராமங்களில் பள்ளி ஏற்படுத்தி, தாங்களே அரசாங்கம் அளிக்கும் மானியத்தை நேரடியாகப் பெறலாம்,"

—இவ்வாறு, அருப்புக்கோட்டையில் நடைபெற்ற தொடக்கப் பள்ளி ஆசிரியர் மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், திரு ஐ. பொன்னையா அவர்கள் குறிப்பிட்டார்.

அருப்புக்கோட்டை வட்டாரத் தொடக்கப் பள்ளி ஆசிரியர் மாநாடு 14—3—54-ல், இந்நகர் கோமதி டாக்கீஸில், திருச்சுழி இந்து நாடார் உயர்தரத் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. ஐ. பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

கெஞ்சுகிறார்கள்!

போர்டிங் பள்ளித் தலைமையாசிரியர் திரு. ஆர். ஜே. செல்லையா, யாவரையும் வரவேற்றுப் பேசியதாவது:—

"அரசாங்கத்தின் திட்டத்தை எதிர்த்தோ, அல்லது வேறு அரசியல் கட்சி வேறுபாட்டினாலோ இம்மாநாடு நடத்தப்படவில்லை; ஆசிரியர்களின் ஆபத்தான நிலையில் அரசாங்கம் அருள் பாலிக்க கெஞ்சிக் கேட்கும் தன்மையில் தான கூடுகிறது," என்றார்.

அஞ்சுகிறார்கள்!

தலைவர் மேலும் பேசியதாவது:—

"இத்திட்டத்தின் பயனாக ஆசிரியர்கள் பலர் வேலை இழக்க நேர்ந்தால் அவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாக நேரிடலாம் என அஞ்சியே, —பகுவேக்ஷர் குழுத் திட்டம் ஆசிரியர்கட்கு ஆபத்தை உண்டாக்கி விடாமல், பாதுகாக்கும்படி கேட்டுக் கொள்வதற்கே—இம்மாநாடு கூட்டப்படுகிறது," என்றார்.

சுட்டிக் காட்டுகிறார்கள்!

பின்னர் மாநாட்டின் செயலாளர் திரு. வேதமாணிக்கம் பேசியதாவது:—

"மத்திய அரசாங்கத்தார் 1720 பள்ளிகளை புதிதாகத் திறக்கத் திட்டம் தீட்டிக் கூறினார்,

(4-ம் பக்கம் பார்க்க)

முஸ்லிம் லீக் முறியடிக்கப்படுகிறது!

—(:)—

20 இடங்களில் ஜாமீன் இழந்தது; ஐ.மு. 85; லீக் 3

டாக்கா, மார்ச் 17—

கிழக்கு பாகிஸ்தானில் இதுவரை அசெம்பிளித் தேர்தலில் முடிவு அறிவிக்கப்பட்ட 96 ஸ்தானங்களில் முஸ்லிம் லீகுக்கு 3 ஸ்தானங்களும், ஐக்கிய முன்னணிக்கு 85 ஸ்தானங்களும் கிடைத்துள்ளன.

இதுவரை 20 தொகுதிகளில் லீக் அபேட்சகர்கள் ஜாமீன் இழந்தனர்; ஒரு தொகுதியில் லீக் அபேட்சகரைவிட 28,000 வோட்டுகள் அதிகமாகப் பெற்று ஐ. மு. அபேட்சகர் வெற்றி பெற்றார்; இதுவரை இவ்வளவு பெரிய வோட்டு வித்தியாசத்தில் யாரும் தோற்றதில்லை.

ஐ. மு. தலைவரும் வங்காளத்தின் பழம் பெரும் தலைவருமான ஏ. கே. பஸ்லுல் ஹக் இரு ஸ்தானங்களுக்கும் போட்டியிட்டு இரண்டு இடங்களிலும் வெற்றி பெற்றார். ஒரு தொகுதியில் அவருடன் போட்டியிட்ட சிவில் சப்ளை மந்திரி எஸ். கே. அப்சல் ஏராளமான வோட்டு வித்தியாசத்துடன் தோற்றார்.

மாராமத்து மந்திரி அசன் அலியை, பஸ்லே ஹக் என்ற ஐ. மு. அபேட்சகர் தோற்கடித்தார். வோட்டு வித்தியாசம் 13,792.

பொதுச்செயலாளர்

அண்ணாதுரை உடல் நலிவு

சென்னை, மார்ச் 18—

பொதுச்செயலாளர் அண்ணாத்துரை அவர்கள் குடியாத்தம், பெங்களூர், திருவண்ணாமலை பகுதிகட்குக் காரிலேயே சென்று சுற்றுப் பிரயாண நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு, காஞ்சிபுரத்திற்கு 16—3—54 காலை வந்து சேர்ந்தார்.

நீண்ட பிரயாணத்தினு லேற்பட்ட நலிவு காரணமாக மீண்டும் நெஞ்சு வலி ஏற்பட்டு மருந்து சாப்பிட்டு, ஓய்வு பெறுகின்றார். முன் அறிவிப்புகள்படி 20—3—54, 21—3—54 தேதிகளில் கோரடாச்சேரி, நாகப்பட்டணம் செல்ல முடியாத நிலைமையிலிருக்கிறார். ஏப்ரல் 15-ந் தேதிக்குமேல் வெளியூர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளக்கூடும்.

உண்ணாவிரதம்—ஜனாதிபதி கருத்து!

'உண்ணாவிரதங்கள் பிரச்னைகளை தீர்ப்பதற்குப் பதிலாக, பிரச்னைகளை மேலும் சிக்கலடையச் செய்கின்றன,"

—என்று ஆந்திராவில் உண்ணாவிரதமிருந்து வரும் சுவாமி சீதாராமுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அனுப்பியுள்ள தந்தியில் குறிப்பிட்டிருப்பதுடன், உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும் கோரியுள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 18—3—1954 வியாழன்

பட்டத்திற்குப் பதவி!

திருவாங்கூர்—கொச்சி மாநிலத்தின் ஆட்சி பீடத்திற்கு ஆட்களை அமர்த்தியாகி விட்டது. 118 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் 19 உறுப்பினர்களையே கொண்ட மக்கள் சோஷலிசக் கட்சியினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு விட்டனர். அந்தக் கட்சியினர் சார்பில் பட்டம் தாணுப் பிள்ளை முதல் மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டார்—இல்லை—பதவிக்கு ஏற்றப்பட்டுள்ளார் என்று கொள்வதே பொருந்தும்.

அங்குள்ள சட்டசபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையோ 118. இதில், குறைந்தது சரி பகுதிக்கு மேல் எண்ணிக்கை பலம் கொண்ட குறிப்பிட்ட ஒரு கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்பதுதான் முறை. அப்பொழுதுதான் ஒரு நிலையான அமைச்சர் அவையும், அதன் வழி இயங்கும் உறுதியான அரசாங்கமும் ஏற்பட இடமிருக்கும். மக்களாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடைபெறும் நாடுகள் அனைத்தும், இந்த நடைமுறையைத்தான் பின்பற்றி வருகின்றன. இப்பொது விதியில் இருந்து சிறிதளவு மாறி நடைபெறும் பிரான்சில் ஆட்சிப் பொறுப்பேற்கும் எந்த அரசாங்கமும் அடிக்கடி கவிழ்ந்து போகும் அலங்கோலத்தில்தான் உள்ளது. இதே போக்கைத்தான் இன்று திருவாங்கூர்—கொச்சியும் பின்பற்றி இருக்கிறது. இந்தப் போக்கின் விளைவும், பிரான்சில் ஏற்படும் விளைவுகளுக்கு மாறுபட்டு இருக்குமென எவராலும் கொள்ள முடியாது.

சட்டசபையில் குறைந்த பட்ச எண்ணிக்கை உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஒரு கட்சியினரிடம், ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது இந்திய அரசியல் சட்டத்திற்கு முரண்பட்டதாக இல்லாமல் இருக்கலாம். இத்துறையில வரையறை ஒன்றும் அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதும் உண்மைதான். இதைப்போலவே, சட்டசபையில் உள்ள மற்றப் பெரும்பான்மை கட்சியினர்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு, மிகமிகச் சிறுபான்மை கட்சியினரை ஆட்சி பீடத்தில் உட்கார வைப்பது முறையானது என ஏற்றுக்கொள்ள, விதி ஒன்றும் அரசியல் சட்டத்தில் இல்லை என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான கட்சியினரைக் கொண்டு, அமைச்சர் குழுவை அமைக்க, இராஜப் பிரமுகருக்குக் கட்டுப்பாடற்ற உரிமை இருக்கிறது என்பது நமக்கும் தெரியும். அந்த உரிமைப்படிதான் 19 உறுப்பினர்களை மட்டுமே கொண்ட மக்கள் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவரான பட்டம் தாணுப் பிள்ளையை, இராஜப்பிரமுகர் முதல் அமைச்சர் ஆக்கியிருக்கிறார் என்பது விளக்கமாகிறது. இவ்வாறு செய்ய இராஜப் பிரமுகருக்குள்ள உரிமையை நாம் மறுக்கவில்லை. ஆனால், இந்த ஏற்பாட்டில் மக்களாட்சியின் நிழலைக்கூட காண முடியவில்லையே என்பதுதான் நாம் எடுத்துக் காட்ட விரும்பும் குறையாகும்.

இந்த நடைமுறை, மக்களாட்சி முறை எனும் ஏற்பாட்டையே கேலி செய்வதாகும்; களங்கப்படுத்துவதாகும்; கொலை செய்வதும் ஆகும்!

பட்டம் தாணுப் பிள்ளை கோஷ்டியிடம் இராஜப் பிரமுகருக்கு மட்டற்ற நம்பிக்கை இருக்கலாம். ஆனால், அமைச்சர் குழுவினர், சட்டசபைக்குப் பொறுப்பானவர்கள்—கட்டுப்பட்டவர்கள் என்ற அரசியல் சட்ட விதிக்கு, இந்த ஏற்பாடு ஒத்து இருப்பதாகக் காணோம்.

காங்கிரஸ் கட்சியினரின் ஆதரவு பலத்தை நம்பித்தான் பட்டத்தைப் பதவியில் அமர்த்தியுள்ளார் இராஜப் பிரமுகர். அதே பலத்தை நம்பித்தான் பட்டமும் பதவியில் ஏறிக் கொண்டார். ஆனால், பட்டத்தின் பதவி காலம் நீடித்து இருப்பதும், நிலை குலைந்து போவதும் காங்கிரஸ் கட்சி காட்டும் ஆதரவையும், எதிர்ப்பையும் பொறுத்து இருக்கிறது என்பதில் ஐயமில்லை.

மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியின் அடிப்படை கொள்கைக்கும் காங்கிரஸ் கட்சியின் அடிப்படைக் கோட்பாட்டிற்கும், இருந்துவரும்—அப்படி ஏதாவது நிலையான கொள்கை இருந்தால்—அக்கொள்கைகளில் முரண்பாட்டைக் காட்டிலும் ஒற்றுமைதான் அதிகமிருக்கிறது என, காங்கிரஸ் கட்சி சார்பிலும் கூறப்படுகிறது; மக்கள் சோஷலிஸ்டுக் கட்சி சார்பிலும் பறைசாற்றப்படுகிறது. இரு சாரார் கூற்றிலும் உண்மை இருந்தாலும் இல்லாமற் போனாலும், இரு கட்சியின் பெயர்களில்தான் மாற்றம் இருக்கிறதே அல்லாது கொள்கையில் கடுகத்தனை மாற்றமும் கிடையாது என இடதுசாரி முன்னணியினர் குறை கண்டால், அதில் வியப்பொன்றும் கிடையாது.

திருவாங்கூர்—கொச்சி தேர்தலில் பொதுமக்களின் ஆதரவை கணிசமாகப் பெற்று, அமைச்சர் குழுவை அமைப்பதில் மிக மிக ஆவல் காட்டி வந்த இடதுசாரி முன்னணியினருக்கு, பட்டம் பதவியில் அமருவது ஏமாற்றத்தையும எரிச்சலையும் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை

இடதுசாரி முன்னணியின் தலைவராக பட்டம் இருந்தார் என்பதும், தலைமை பீடத்திலிருந்து கட்டளை பிறக்கிற வரையில் இடதுசாரி முன்னணியினர் ஆட்சிப் பொறுப்பேற்பதையும் ஆதரித்து வந்தார் என்பதும் அனைவருக்கும் தெரியும். பட்டம் தாணுப் பிள்ளையும், மற்றொரு ஆந்திர கேசரியாக முடிவில் மாறி விட்டது, இடதுசாரி முன்னணியினரின் அரசியல் கண்ணோட்டத்தின் தராதரத்தை எடுத்துக் காட்டுவதாகும்.

பட்டம் தாணுப் பிள்ளை முன்னாள் காங்கிரஸ்காரர். ஏழு திங்களுக்குக் குறையாமல் முன்னர் காங்கிரஸ் முதல் மந்திரியாகவும இருந்து பயிற்சி பெற்றுள்ளார். அத்துடன், காங்கிரஸ் கட்சியில் மனப் பிளவு ஏற்பட்டவுடன், சோஷலிஸ்ட் கட்சியில் குடியேறுவதின் மூலம், நினைத்த மாத்திரத்தில அரசியல் கூடுவிட்டு கூடு பாயும் அருங் கலையிலும் அனுபவம் பெற்றிருக்கிறார்.

எனவே, இப்போது அவர் சேர்ந்துள்ள மக்கள் சோஷலிஸ்ட் கட்சியினருக்கும், அவருக்கும் சொந்த முறையில் பிணக்கு ஏற்பட்டாலும், பட்டம் தாணு சில கட்டுத் தோழர்களுடன் காங்கிரசில் இரண்டறக் கலந்து விடுவதென்பது எதிர்பார்க்கக் கூடியதே! இத்தகைய அரசியல் இடம் மாறும் பித்தலாட்டத்திற்கு முடிவு கட்ட வேண்டிய பொறுப்பு வாக்காளர்களைச் சேர்ந்ததேயாகும்.

பட்டம், பதவி பெற்ற அலங்கோல ஏற்பாட்டிற்கும், வாக்காளர்களின் அரசியல் தெளிவிற்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது. நூற்றுக்கு அறுபது எழுபது நபர்களுக்கு மேல் சிறந்த கல்வி அறிவு வாய்க்கப் பெற்றவர்களை வாக்காளர்களாகக் கொண்ட திரு.—கொச்சியிலேயே மக்களின் அரசியல் விழிப்பு இப்படி இருக்கிறது என்றால், மற்ற இடங்களைப்பற்றி அவநம்பிக்கையோடும் அச்சத்தோடும்தான் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது. மக்களாட்சிமுறை வெற்றிக்கு, கல்வி கற்றும், விழிப்புணர்ச்சி கொண்டும் மக்கள் இருப்பது மட்டும் போதாது; அரசியல் தெளிவும் தேவைப்படுகிறது என்ற மகத்தான படிப்பினையை திரு—கொச்சி தேர்தல் நமக்கு அளித்திருக்கிறது.

'பவனி'யல்ல! பாதுகாப்பு!!

சென்னை, மார்ச் 16—

"முதல் மந்திரி ஆந்திரருக்கு வந்த பொழுது 50 போலீஸ் இன்ஸ்பெக்டர்களும், 70 ஹெட்கான்ஸ்டேபிள்களும், 250 சாதாரண போலீஸ்காரர்களும் வந்திருந்தனர்; அத்துடன் ஜில்லா அதிகாரிகள் ஆஜராகி யிருந்தனர்; இவ்வளவு பேர்களுடைய பிரயாணச் செலவு ஒரு நாளைக்கு ரூ. 5 ஆயிரத்துக்கு மேலே யிருக்கும்,"

—என்று சட்டசபையில் எம். பி. சுப்பிரமணியம் (திராவிடக் கட்சி) கூறினார்.

மானக்கேடல்ல! மனவேதனை!!

சென்னை, மார்ச் 16—

ஆந்திரா பிரிவதற்கு முன்பு பிரதம காரியதரிசியின் அலுவலகத்தில் 11 அதிகாரிகள் இருந்ததுபோல இப்போதும் இருக்கிறார்கள்; சட்ட இலாகாவில் முன்பு 8 அதிகாரிகள் இருந்தார்கள்; இப்போது 9 பேர் உள்ளனர்; இதே போல சம்பள விகிதத்திலும் பிரதம காரியதரிசியின் காரியாலயத்தில் உள்ள 11 அதிகாரிகளுக்கு 130 ஆயிரம் ரூபாயும், அவர்களுக்குக் கீழ் வேலை செய்யும் 192 சிப்பந்திகளுக்கு ரூ. 222 ஆயிரமும் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது."

இவ்விவரங்களை சென்னை சட்டசபையில், மந்திரிகளின் எண்ணிக்கையையும், நிர்வாகச் செலவையும் குறைக்க வேண்டுமென்று ஒரு வெட்டுப் பிரரேபணை பிரரேபித்துப் பேசுகையில் எஸ். ராமலிங்கம் தெரிவித்தார்.

நப்பாசை விடவில்லை!

கர்னூல், மார்ச் 15—

சென்னை நகரம் உட்பட இதுவரை எட்டு இடங்களில் ஆந்திரா பாத்தியதைக்கு ஆதாரமான புள்ளி விவரங்களையும், இதர தகவல்களையும் சேகரிப்பதற்காக ஆந்திர சர்க்கார் உத்தியோகப் பற்றற்ற குழுக்களை நியமித்திருக்கிறது.

குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள மற்ற ஏழு இடங்கள் தாடா (நெல்லூர் மாவட்டம்); திருத்தணி, குப்பம், சித்தூர் (சித்தூர் மாவட்டம்); இந்துபூர் (அனந்தபூர் மாவட்டம்); பெல்லாரி (மைசூர்) ஆகியவையாகும்.

சி. பி. இராமசாமி அய்யரின் 'திமிர்வாதம்!'

கன்னடம், தமிழ் மொழியின் தாயாம்!

அண்ணாமலைநகர், மார்ச் 17—

12—3—54-ல், அண்ணாமலை பல்கலைக் கழக கன்னடக் கழகத்தின் சார்பில், பட்டமளிப்பு விழா மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. தலைமை வகித்த டாக்டர் கிருஷ்ணமூர்த்தி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"திராவிட மொழிகளில் ஒன்றான கன்னடம் தமிழிலிருந்து பிறந்ததே; திராவிட மொழிகளின் தாய் தமிழ்; மற்ற மொழிகள்—கன்னடம் உட்பட—அதன் சேய்களே," என்றார்.

அடுத்துப் பேசிய துணை வேந்தர் சி. பி. இராமசாமி அய்யர் கூறியதாவது:—

"கன்னடம்தான் தமிழின் தாய்; கன்னடத்திலிருந்துதான் தமிழ் பிரிந்திருக்க வேண்டும்; 'தமிழிலிருந்து கன்னடம் பிரிந்தது—கன்னடத்தின் தாய் தமிழ்' என்று கூறுவது தவறு," என்று பேசினார். கூடியிருந்த மாணவர்கள் அவருடைய குதர்க்க புத்தியைக் கண்டு எள்ளி நகையாடினர். (ந. நி.)

மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் நிதி உதவி

ரூ 266 கோடி அளிக்கப்பட்டது!

புதுடில்லி, மார்ச் 17—

ஐந்து ஆண்டுத் திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு, மத்திய சர்க்கார் கடன் தொகைகளாகவும், முன்பணத் தொகைகளாகவும் 1951—54ம் ஆண்டு காலத்தில், மொத்தம் ரூ. 266 கோடி 2 லட்சம் நிதி உதவியளித்திருக்கிறது.

இதில் "ஏ" பிரிவு மாநிலங்களுக்கு மொத்தம் 228 கோடி ரூபாயும், "பி" பிரிவு மாநிலங்களுக்கு மொத்தம் 38 கோடி 20 லட்சம் ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

லீகுக்கு நெருக்கடி!

ஆராய்ச்சி செய்கின்றனர்!

கராச்சி, மார்ச் 16—

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் காரியக் கமிட்டி இங்கு கூட்டி முஸ்லீம் லீகுக்கு ஏற்பட்டு வரும் மகாமோசமான நெருக்கடி குறித்தும், தேர்தலில் தோல்விக்கான காரணங்கள் குறித்தும் விவாதித்ததாகத் தெரிகிறது. லாகூர் செல்லவிருந்த பாக்-பிரதமர் தமது பிரயாணத்தை ரத்து செய்து விட்டார்.

புதுடில்லி, மார்ச் 16—

இராணுவத்துடன் கலாசாரத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்காக ரூ. 10,08,000 இந்திய சர்க்கார் ஒதுக்கியுள்ளனர்.

ஜெனரல் ஆஸ்பத்திரி பராமரிப்புச் செலவு

மந்திரி தரும் விவரம்

சென்னை, மார்ச் 16—

1952—53-ல், ஜெனரல் ஆஸ்பத்திரியின் மொத்த பராமரிப்புச் செலவு ரூ. 30,40,631 என்று சட்டசபையில் சுகாதார மந்திரி அறிவித்தார்.

அதில் நிர்வாகச் செலவு ரூ. 10,39,208; மருந்துகள் ரூ. 10,97,984.

ஆஸ்பத்திரியிலேயே தங்கி சிகிச்சைப் பெற்றவர்கள் 36,870 பேர்; தங்காமல் சிகிச்சை பெற்றுச் சென்றவர்கள் 4,42,724 பேர்.

கவர்னர் செலவு— நிதி மந்திரி குறிப்பு!

சென்னை, மார்ச் 16—

கவர்னர் மாளிகை தோட்டத்தில் விளையும் பூ, காய்கறிகளை விற்பதன் மூலம் சர்க்காருக்கு 1952-53-ம் ஆண்டு ரூ. 1363-7-0 வும், 1953-54-ல் ரூ. 5,000-ம் கிடைத்தது என்று சட்ட சபையில் நிதி மந்திரி தெரிவித்தார்.

கவர்னர் மாளிகை தோட்டப் பராமரிப்புக்கு ரூ. 66000 ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

"துரதிருஷ்ட வசமாகக் கவர்னருக்கு ஏராளமாக வீண் செலவு செய்யப்படுவதாக அபிப்பிராயம் கூறப்பட்டது; அது சரியல்ல; கவர்னர் சிறிய அளவில்தான் சிப்பந்திகளை வைத்துக் கொண்டுள்ளார்," என்று குறிப்பிட்டு, தொடர்ந்து நிதி மந்திரி கூறியதாவது:

"அவர் மாநிலத் தலைவர்; ஆகவே, அவர் மாளிகை, மாநில அந்தஸ்துக்கு ஏற்றார் போல இருக்கவேண்டும்; அரசியல் சட்டப்படி கவர்னர் பதவி உள்ளது; செலவெல்லாம் இடையில் ஏற்பட்டவை."

எகிப்து தலைவர்களுக்கு விடுதலை?

கெய்ரோ, மார்ச் 16—

எகிப்தில் இராணுவச் சட்டம் சில தினங்களில் ரத்தாகும் என உதவி பிரதம மந்திரி கமால் நாஸீர் அறிவித்துள்ளார்.

வபத் கட்சித் தலைவர் முஸ்தாபா நஹாஸ் பாட்சா, முஸ்லீம் சகோதரத்துவ (பயங்கரவாத) சங்கத் தலைவர் டாக்டர் ஹாடிபி உட்பட 400 அரசியல் கைதிகள் விடுதலையாவர் என்றுதெரிகிறது.

புதுடில்லி, மார்ச் 17—

கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்காக, பல்வேறு மாநிலங்களுக்கு மொத்தம் சுமார். ரூ 1,56,000 சகாயத் தொகை அளித்திருப்பதாக இந்திய சர்க்கார் அறிவித்துள்ளனர்.

பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை சுற்றுப் பயண நிகழ்ச்சி

—— ( ) ——

குடியாத்தம், பெங்களூர், திருவண்ணாமலையில் வரவேற்பு

——(:)——

பொதுக்கூட்டங்களில் தோழர்கள் சொற்பொழிவு

சென்னை, மார்ச் 17—

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., அ. பொன்னம்பலனார் ஆகியவர்களுடன் சென்னையிலிருந்து புறப்பட்டு, 13, 14, 15–3–54-ந் தேதிகளில் குடியாத்தம், பெங்களூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்ட விவரங்கள் கீழே தரப்படுகிறது:—

★

குடியாத்தம்:

கைத்தறி வார விழா — பொதுக்கூட்டம்

குடியாத்தம், மார்ச் 14—

குடியாத்தத்தில் 13—3—54 இரவு 6-30 மணிக்கு தோழர் எஸ். கே. திருவேங்கடம் அவர்கள் தலைமையில் அகில இந்திய கைத்தறி வார விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலனார், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., பொதுச்செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் பேசினர்.

கைத்தறி வாரம் கொண்டாடுவதின் மூலம் நெசவுத் தொழிலாளர் நிலை உயர்ந்துவிட முடியாதென்றும், ஆலை முதலாளிகளின் பொருள் ஆதரவு பெற்று நெசவுத் தொழிலை வளர்ச்சி பெறச் செய்ய முடியாதென்றும், நெசவுத் தொழிலைப் பாதிக்கும் வகையிலுள்ள ஆலைத் துணிகளோடு போட்டி போட்டுக் கொண்டு கைத்தறி நெசவுத் தொழில் வளம் பெற முடியாதென்றும் எடுத்துக் காட்டினர்.

ஆட்சியாளர்கள் கைத்தறி நெசவுத் துணிக்கும், நெசவுத் தொழில் வளர்ச்சிக்கும் மெய்யாகவே உதவி செய்வதானால் ஆலைகளிலிருந்து வரும் ஆடைகளைத் தடை செய்ய வேண்டுமென்றும், பொதுமக்கள்-ஆண்களும், பெண்களும்—கைத்தறி நெசவுத் துணிகளையே வாங்கிப் பயோகிக்க வேண்டுமென்றும், ஆலை மில் துணிகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

காங்கிரஸ் ஆட்சியாளர்கள் ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால் கோடிக்கணக்கான பொருள் செலவு செய்யத் திட்டம் போட்டுக்கொண்டும், ஆலை மில் துணிகளையும், ஆலை மில் முதலாளிகளையும் ஆதரித்துக் கொண்டும், அதே சமயத்தில் அகில இந்திய கைத்தறி வாரம் கொண்டாடுவது நெசவுத் தொழிலாளர்களுக்குக் கண் துடைப்பே தவிர வேறில்லை என்றும் சுட்டிக் காட்டி, விளக்கமாகவும் விரிவாகவும் பேசினர்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கட்கு பல கிளைக் கழகங்களும், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களும், கூட்டுறவு சங்கங்களும் வரவேற்பு மடல் வாசித்தளித்து, மலர் மாலை சூட்டினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

★

பெங்களூர்:

தூத்துக்குடி நிதியளிப்பு பொதுக் கூட்டம்

பெங்களூர் சிட்டி சிக்கலால் பேட்டையில், பெங்களூர் தி மு கழக சார்பில், 14—3—54 இரவு 10 மணிக்கு தோழர் மா. மன்னர் தலைமையில், தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கில் மக்கள் குழுமியிருந்தனர். ஏராளமான பெண்களும் கூட்டத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பல கிளைக் கழகங்களும், வியாபாரிகளும், தொழிலாளர்களும், மாணவர்களும், நாடக மன்றங்களும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களை வாழ்த்தி மலர் மாலைகள் சூட்டினார்கள்; வாழ்த்து மடல்களும் வாசித்தளித்தார்கள். தூத்துக்குடி வழக்கு நிதிக்கு பல கிளைக் கழகங்களும், தோழர்களும் அன்புடன் உதவினார்கள்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் அ. பொன்னம்பலனார், ஏ கோவிந்தசாமி எம். எல். ஏ., பொதுச்செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியம் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தையும், வடநாட்டார் ஆதிக்கத்தால் திராவிடம் தேய்வதையும், மக்கள் வாடுவதையும், உரிமைகள் பறிக்கப்பட்டு அடக்குமுறைக் கொடுமைகள் பெருகிக் கொண்டு வருவதையும் விளக்கினார்கள்.

ஆச்சாரியார் புதிய கல்வித் திட்டம் நாட்டு மக்கள் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி, கல்வியறிவு வளர்ச்சியை ஒடுக்கி, குலக் கல்வி என்ற பெயரால் குலத் தொழிலைச் செய்யும்படித் தூண்டுவதையும், பிறவியில் உயர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்ளும் பார்ப்பனர் பாடுபடாமல் உல்லாச வாழ்வு நடத்தவே அவர்களுக்கு ஆட்சிமுறை மூலம் ஆச்சாரியார் துணை செய்கிறார் என்பதையும் விளக்கிக் கூறினார்கள்.

சமூகம் — அரசியல் — பொருளாதாரம் ஆகிய துறைகளில் நாம் விடுதலை பெற—முன்னேற்றமடைய வடவர் பிணைப்பிலிருந்து திராவிடம் பிரிய வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

உலகில் சிறு சிறு நாடுகள் தனியரசாக இயங்கும்பொழுது திராவிடம் மட்டும் ஏன் தனியரசாக வாழ முடியாது என்று வினவினர்.

வடநாட்டார் பிடிப்பிலிருந்து விலகி, மொழிவாரி அடிப்படையில் தமிழ் நாடு, ஆந்திரம், கேரளம், கன்னடம் தனித் தனி ஆட்சியாக அமைந்து, கூட்டுத் திராவிடக் குடியாட்சி நிறுவ திராவிட மக்களாகிய நாம் ஒன்றுபட வேண்டும் என்றும் விரிவுரையாற்றினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு இரவு 10 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

இரண்டாவது பொதுக் கூட்டம்

பெங்களூர் சீராமபுரத்தில், தி மு. கழகம் ஒன்றைத் துவக்கி வைத்து, தி. மு. கழகக் கொடியையும் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள் ஏற்றி வைத்தார்கள்.

பிறகு வ. உ. சி. திடலில் இரவு 12 மணிக்கு, தோழர் சு. கண்ணன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பிறகு, தோழர்கள் அ. பொன்னம்பலனார், சி. வி இராசகோபால், ஏ கோவிந்தசாமி, எம். எல். ஏ ஆகியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்கள். பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் உடல் நலிவு, நெஞ்சு வலி காரணமாக இப்பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியவில்லை.

இப்பொதுக் கூட்டத்திலும் தூத்துக்குடி—கல்லக்குடியில் உயிரிழந்தவர்கள் நிதிக்காக பணம் உதவினார்கள்.

4 குழந்தைகட்கு செல்வம், நிலாவதி, அன்புச்செல்வி, மங்கையர்க்கரசி என்ற பெயர்கள் சூட்டப்பெற்றது.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

நிதியளிப்பு வசூல் விவரம்

பெங்களூர் தி. மு. கழக மூலம் வரவு —நேரில்	100—0—0
உண்டியல் வசூல் ரூ.	25—4-11
சேலம் கே. மாரிமுத்து மூலம்	1—1—9
எம். பிச்சை மூலம்	4—2—0
பசவன்குடி தி. மு. கழகம்	13—0—0
கொங்குப்பட்டி டி. ஆர். தனுஷ்கோடி	0—8—0
பாண்டியன் நாடக மன்றம்	11—4—0
பி. எம். சாமி மூலம்	1—9—3
டாபீஸ்பேட்டை தி மு. கழகம்	20—0—0
பெரியார் நகர் தி.மு. கழகம்	16—0—0
காடுகொண்ட பள்ளி தி. மு. கழகம்	5—1—3
இலட்சுமண நாராயணபுரம் பொது மக்கள் மூலம்	15—5—0
பெங்களூர் 50-வது தொகுதி மூலம்	11—0—3
அக்கிப்பேட்டை தி. மு. கழகம் திரு டி. செல்வராசன் புதல்விக்கு பெயர் சூட்டியது	1—0—0
அழகிரி மன்றப் மூலம்	5—4—6
'இரணியன்' பெயர் சூட்டல்	1—0—0
ஏ. பி. ஆர். சந்திரன் மூலம்	1—9—3
பி. யு. சின்னப்பா நாடக மன்றம்	2—0—0
சிகரெட் பாக்டரி முற்போக்கு தொழிலாளர்கள் மூலம்	6—0—0
சண்முகம், துரைசாமி, நாராயணசாமி, துரைசாமி, முனிசாமி ஆகியோர்	6—0—0
விவரமில்லாத சில்லரை வகையில் வந்த வரவு	66—5—6
சீராமபுரம் தி. மு. கழகம் (116 அணா முடிப்பு)	7—4—0
சீராமபுரம் பொதுக் கூட்டத்தில் நான்கு குழந்தைகட்குப் பெயர் சூட்டியது	4—0—0
கே. என். பொன்னம்பலம்	1—0—0
எழிலன் மூலம்	1—0—0
	326—11—8
கல்லக்குடி, தூத்துக்குடி உயிர்நீத்த தோழர்களுக்கு சீராமபுரம் தி. மு. கழகம் மூலம் வசூல் செய்தது	8—8—0
திரு. வி. என். குமாரவேல் நிதிக் குழு (திரு ச. வெ துரைராசன் தி. மு. கழக மூலம்)	11-11—6
ஆக ரூ.	20—3—6
ஆக மொத்தம் ரூ.	346—15—2

★

திருவண்ணாமலை:

தூத்துக்குடி நிதி அளிப்பு

திருவண்ணாமலை, மார்ச் 16—

தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் 15—3—54 இரவு 7 மணிக்கு சின்னக்கடை தெருவில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் நடைபெற்றது. தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., தலைமை வகிக்கும்படி தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் கேட்டுக் கொண்டார். தோழர்கள் பலர் தமிழிசை பாடினர்.

தலைவர் முன்னுரையாக இன்றைய ஆட்சியாளர் போக்கையும், ஜனநாயகம் கொலை செய்யப்பட்டு, அடக்குமுறை மூலம் திராவிட மக்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் நசுக்கிவிட ஆட்சியாளர் திட்டமிட்டு, தூத்துக்குடி — கல்லக்குடியில் நம் தோழர்கள் மீது வழக்குகள் தொடர்ந்திருப்பதையும் விளக்கினார்.

பின்னர், தோழர்கள் அ. பொன்னம்பலனார், என் வி. நடராசன், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியம் பற்றியும், வட நாட்டார் ஆதிக்கம் வளர்வதையும், தென்னாட்டின் செல்வம் சுரண்டப்பட்டு மக்கள் உரிமைகள் பறிக்கப்பட்டு வருவதையும் விளக்கிப் பேசினர். திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய மும்முனைப் போராட்டங்களின் வெற்றியையும், ஆச்சாரியார் புதிய கல்வித் திட்டம் கேடு பயக்கும் கொள்கையுடையது என்பதையும், பிரதமர் நேருவின் நாத்தடிப்பான இழிவுரைகள் கேட்டு நம் வெறுப்பைக் காட்ட நாடு முழுதும் இரயில்கள் ஒரு நாள் நிறுத்தப்பட்டதின் மூலம் நேருவின் போக்கையும் — எதிர்ப்பையும் உலகம் அறியும்படி செய்ததையும் விளக்கினர்.

பல்லாயிரக்கணக்கில் நம் தோழர்கள் சிறைப்பட்டும், துப்பாக்கிக் குண்டுகளால் மாண்டும், காயமுற்றும் உறுதி கலங்காமல் படை வரிசையில் வீரத்துடன் பணியாற்றிய தி. மு. கழக வீரர்களின் சக்தி வளர்ந்திருக்கிறதென்றும், மக்கள் ஆதரவு பெருகியிருக்கிறதென்றும் குறிப்பிட்டனர்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களிடம் தூத்துக்குடி நிதிக்கு ரூ 301 (ரூபாய் முன்னூற்று ஒன்று) கொண்ட பண முடிப்பை தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் அளித்தார்.

பல கிளைக் கழகங்களும் தனித் தனியாக நிதிகள் உதவியதும், உண்டியல்மூலம் வசூலானதும் ஆகமொத்தம் ரூ 126—4—8-ம் -ஆகமொத்தம் ரூ 427—4—3-ம் வரப்பெற்றேம்—நன்றியுடையது—பொருப்பாளர்.

பலர் மலர் மாலை சூட்டினர். தலைவர் முடிவுரையுடன் இரவு கூட்டம் 10 மணிக்கு இனிது முடிந்தது.

• • •

நிதியளிப்பு வசூல் விவரம்

திருவண்ணாமலை தி. மு. கழகம்— திரு. ப. உ. சண்முகம் அவர்களால் கொடுக்கப்பட்டது	301—0—0
பொதுக்கூட்ட உண்டியல் மூலமாக வசூல்:—	
ராசமாணிக்கம் மூலம்	17—8—3
துரை அண்ணாமலை மூலம்	13-11—9
இரா. தர்மலிங்கம் மூலம்	8—4—9
சிவலிங்கம் மூலம்	7—2—6
ஆக ரூபாய்	347—11—3
தோழர் மணவழகன் மூலம்	6—6—0
நாடமுகானத்தல் இராமவரிசைகள் மூலம்	12—6—0
திருவண்ணாமலை மாடர்ன் கபே பார்ப்பன ரல்லாத தொழிலாளர்கள் மூலம்	7-13—0
அகில இந்திய காபி கடை	10—0—0
கரும்பலூர் தி. மு. கழகம்	30—0—0
கொச்சிமலை கிராம சேவா சங்கம்	10—0—0
மேல் பாப்பாம்பாடி குப்புச்சாமி	1—0—0
சின்னக்கடை தெரு பீமசெட்டியார்	2—0—0
ஆக மொத்தம் ரூ.	427—4—3

6,000 தமிழ் மக்கள் தவிப்பதற்கு வழி வகுத்தது சர்க்கார்!

பம்பாய் செயற்கைப் பட்டு ஆலைகள் மூடப்படும்?

பம்பாய், மார்ச் 16—

செயற்கை பட்டின் மீது வரி விதிக்கப் போவதாக மத்திய சர்க்கார் அறிவித்ததை யொட்டி, அதை எதிர்த்து மில் சொந்தக்காரர்கள் 100-க்கு மேற்பட்ட மில்களை மூடப் போவதாக முன்னறிவிப்பு செய்ததின் காரணமாக வேலை இழக்கும் 25,000 தொழிலாளர்களில் 6 ஆயிரம் பேர்கள் தமிழர்களாவர்; இதில் பெரும்பாலோர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலசின்னணம்பட்டி தி. மு. கழகம்

இவ்வூர் தி. மு. க. செயற்குழு கூட்டம் தோழர் வி பி. சாமி தலைமையில் 10—3—54ல் நடைபெற்றபோது, இவ்வூர் சுற்றுப் புறங்களில் பூச்சிகளால் நெற்பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டபடியால் வரி வசூல் செய்ய வேண்டுமென மாவட்ட அதிகாரியை கேட்டுக் கொள்கிறது எனது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குள்ளக்காபாளையம் தி. மு. கழகம்

12—3—54 மாலை 7 மணிக்கு கழக கட்டிடத்தில் தோழர் வை. மல்லையன் தலைமையில் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. அது போது, 1-11-53 முதல் 28-2-54 வரையுள்ள வரவு-செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டதுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கணியூரில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

13—3—54ல் தி மு. கழகச் சார்பில், ஓர் பொதுக்கூட்டம் தோழர் மே. கி. தெம்பரனார் தலைமையில் நடைபெற்றது. தலைவர் 'பழங்காலத் தமிழரும், உழவும் தொழிலும்' என்ற தலைப்பில் பேசினார். பின்னர் தோழர் கி. பி. சிற்றரசு அவர் புதிய கல்வித் திட்டம், தி. மு. கழக எதிர்காலப் போராட்டம் ஆகியவை பற்றிப் பேசினார்.

அய்யரின் ஆதிக்கத்தில் அண்ணாமலை!

'விடுதி நாள்' திடீரென்று நிறுத்தப்பட்டது!

மாணவர் குழாம் குமுறுகிறது!

அண்ணாமலைநகர், மார்ச் 17—

அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர் விடுதி நாள் இவ்வாண்டு வெகு சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து அலங்காரங்களும், ஏற்பாடுகளும் பிரமாதமாக செய்யப்பட்டிருந்ததுடன் விரிவுரையாற்றுவதற்கு திருமதி ஓ. சி. சீனிவாசன் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்.

விழா நடைபெறும் நாளன்று—14-3-54 பிற்பகல் வரை ஏதுமில்லாமலிருந்து, திடீரென 1 மணிக்கு விடுதி நாள் தடைபடுத்தப்பட்டுவிட்டதாக அறிக்கைகள் வெளியிடப்பட்டன. காரணம் 'காலையில் நடந்த மாணவர்கள் உல்லாச நீராட்டத்தில், ஆசிரியர்கள் மீது நீரிறைத்ததே,' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆசிரியர்கள் மீதும், மாணவர்கள் மீதும் நீர் இறைத்து மகிழ்வது ஆண்டுதோறும் நடந்துவருவது சர்வ சாதாரண நிகழ்ச்சியாகும்.

உள்ளத்திலே வேறு எண்ணம் கொண்ட துணைவேந்தர் சி. பி. அய்யர், விழாவினை நிறுத்திவிடும்படி திடீரெனப் பகல் ஒரு மணிக்கு ஆணையிட்டார். பாதுகாப்பாளர் இராமாநுசாச்சாரியாரும், விடுதிப் பிரதிநிதிகள் ஐவரும் துணைவேந்தரைச் சந்தித்து எவ்வளவோ எடுத்துக் கூறியும், வாதிட்டும் ஒரே முடிவாக மறுத்துவிட்டார்.

இதை அறிந்த மாணவர் குழாம் குமுறி எழுந்தது; இதுவரை ஆண்டுதோறும் தவறாமல் நடந்துவரும் விழா தடை செய்யப்பட்டது—அதுவும் விழா நாளன்று தடை செய்யப்பட்டது கண்டு, தொடர்ந்து விழாவை நடத்த வேண்டும் எனப் பாதுகாவலரைக் கண்டு கேட்டது.

ஆனால், பாதுகாவலர் தன்னால் எதுவும் செய்ய முடியாதெனச் சொல்லிவிடவே, மாணவர்கள் இரவு உணவு எடுத்துக்கொள்வதில்லை என முடிவு செய்தனர். அய்யரின் ஆணவப் போக்கினைக் கண்டிக்கும் முகத்தான் அன்று பெரும்பாலான மாணவர்கள் இரவு உணவு—விருந்து எடுத்துக்கொள்ளவில்லை.

விடுதி நாள் தடைப்படுத்தப்பட்டதால் அதற்காகச் செய்திருந்த ஏற்பாடுகளும், பல ஆயிரக்கணக்கான ரூபாய்களும் விரையமாயின—அவ்வளவு நஷ்டமும் மாணவர்கள் தலையில் வந்து விழுவதே!

அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவைத் தடை செய்ததின் உட் காரணம், இங்கு, "கழகம்" வளர்ந்து வருவதே! அதைத் தடை செய்ய வேண்டுமென்பதே அய்யரின் அளவிலாத ஆசை. (கழகத்தைக் கண்டித்தும், இன்டல் செய்து பலநடவை பேசியிருக்கிறார். (நடைபெற முடியாத அந்த ஆசை, ஆண்டாண்டுதோறும் நடைபெற்று வந்த விடுதி நாளையே தடுத்து நிறுத்தி, மாணவர் வரலாற்றிலேயே ஒரு களங்கத்தை உண்டு பண்ணிவிட்டது.

(ந.நி.)

வாழ்க்கைப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். மாநில அரசாங்கத்தாரால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை மூடும்படியான நிலைமை இங்கு ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆஜர் எண்ணிக்கையின் காரணமாக 1956-ம் ஆண்டிற்குள் மாநிலத்தில் 10,844 ஆசிரியர்கள் வேலை இழக்க நேரிடும்.

பரம்பரைப் பண்பு என்கிறார்கள்!

மாநாட்டுச் செயலாளர் டி. கே. சுப்பிரமணியம் பேசியதாவது:—

"மத்திய அரசாங்கத்தார் கொள்கை, மாநில அரசாங்கத்தார் போக்கு, பெற்றோர்கள் நிலை, பிள்ளைகள் வாழ்வு இவைகளின் முன்னிற்பது திட்டம்; மேனாடுகளில் ஆசிரியர்கள் மதிக்கப்படும் நிலை, நம் நாட்டில் கல்வி சம்பந்தமான மாற்றம் ஆசிரியர் கலந்து கொள்ளாமலேயே திட்டம் தயாரிக்கப்பட்டதோடல்லாமல், செயல் படுத்தும் விதத்தால் ஆசிரியர்களை அதிகம் பாதிக்கச் செய்கிறது."

"ஏற்கனவே மீறுதவரும் ஆசிரியர்களுக்குள்ள தொல்லைகள் காணுதென, இனி பிள்ளை கூப்பிடும் வேலையும் நம்மீது சுமத்தப்படுகிறது; இது கண்டும் நாம் சலிக்கவில்லை; இது நமது பரம்பரைப் பண்பு; நாமே கவனித்து வருகிறோம். பெற்றோர்களுக்குக் கட்டாயம் பிள்ளைகளை அனுப்பும் பொறுப்புக்கு அரசாங்கச் சட்டம் மூலம் வற்புறுத்துவதை விட்டுவிட்டு, ஆசிரியர்கள் ஆஜர் எண்ணிக்கை என்ற பேரால், பல பள்ளிகளிலிருந்து ஏராளமான ஆசிரியர்கள் வெளியேறுவதோடு, படித்துவரும் ஆசிரியர்களின் நிலை என்னவாகும் என்று யோசிக்கும்போது பயங்கரமான வாழ்க்கைப் பாதையை ஆசிரியர்கள் கடக்கவேண்டியிருக்கிறது."

ஆசிரியர் இராமசாமி, ஜி கோவிந்தன் சுப்பு, சென்னகேசவன் ஆகியோரும் பேசினர்.

தீர்மானங்கள்

ஆசிரியர்-மாணவர் விகிதத்தை முன்னர் இருந்த 20 எண்ணிக்கைப்படியே இனி இருக்கவேண்டுமாயும், மேலும் உயர்த்தினால் ஆசிரியர்கள் பலர் வேலையிழக்க நேரிடும் என்றும் கேட்டுக்கொண்டு, புதிய பள்ளிகள் திறக்கும் முயற்சிக்கு அரசாங்கம் உதவி செய்தும், ஸ்தல ஸ்தாபனப் பள்ளி, அரசாங்க மானியம் பெறும் பள்ளி ஆகிய இரண்டையும் வேறுபாடின்றி பாட போதனை, நடைமுறை இவைகளில் ஆஜர் விகிதம் ஒரே தன்மையாக இருக்கும்படி உத்தரவு செய்யும்படியாகவும், அருப்புக்கோட்டை வட்டாரத் தொடக்கப் பள்ளி ஆசிரியர் (யூனியன்) ஐக்ய சங்கம் அமைக்க வேண்டுமாய் ஆசிரியர்களைக் கோரியும், ஆசிரியர் தொகுதியிலிருந்து சட்டசபைக்கு உறுப்பினர் தேர்தலில் ஆசிரியர்களுக்கே வாக்குரிமை அளிக்கும் வாய்ப்பை ஏற்பாடு செய்ய வேண்டுமாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அருப்புக்கோட்டை வட்டாரத் தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஐக்கிய சங்கம் அமைக்க திரு. சங்கரநாராயண பிள்ளையை அமைப்பாளராக 12 பேர்களடங்கிய குழு வொன்றும் அமைக்கப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் டி. கே. சுப்பிரமணியம் நன்றிகூற மாநாடு இனிது முடிந்தது.

கழகக் கூட்டங்கள்

★

பொதட்டூர்பேட்டை

19—3—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: எ. தே. கு. ராமசாமி

பேசுவோர்:

க. அன்பழகன்

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.

★

சம்பட்டிபுரம்

திரு வி. க. நினைவுப் படிப்பகம் (திராவிட முன்னேற்றக் கழகம்)

துவக்க விழா

20—3—54 இரவு 7 மணிக்கு

பேசுவோர்:

கே. எஸ். இராசமான்

கே. எஸ். சந்தானம்

கே. எஸ். மணி

பஞ்சாயத்து போர்டில் திரு. வி. க. படத் திறப்பு

★

19-3-54ல், சித்தூர் மாவட்ட திருத்தணி தாலுக்கா பொதட்டூர் பேட்டை மேஜர் பஞ்சாயத்து போர்டில் மாலை 4-30 மணிக்கு, தோழர் க. அன்பழகன் அவர்கள் திரு. வி. க. படத் திறப்பு விழா வாற்றுவார். அன்று மாலை 5 மணிக்கு. பஞ்சாயத்து போர்டைச் சேர்ந்த திரு வி. க. நூல் நிலையத்தைத் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ அவர்கள் திறந்து வைப்பார். மாலை 6 மணிக்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

திருக்குறள் பிரசாரம்

★

குருகுலம், மாம்பாக்கம், சென்னை: 19—3—54 மாலை 5 மணிக்கு, மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயிலில், திரு சங்கர வடிவேல் பிள்ளை தலைமையில், ஆசிரியர் இளவழகனார் 'பாயிரவியல்' பற்றிப் பேசுவார். பாயிரம் பற்றிய சிறு கட்டுரை நூல் ஒன்றை குருகுலச் சார்பில் மேற்படி கோயில் தர்மகர்த்தர் சங்கரஞ் செட்டியார் வெளியிடுவார்,

துப்பாக்கிப் பிரயோகத்தால் பாதிக்கப்பட்டோரின் குடும்ப நிதிக்காக

★

23—3—54 மாலை 5½ மணிக்கு எழும்பூர் மியூசியம் தியேட்டரில் தோழர் அண்ணுதுரை தலைமையில் T.N. இராவணன் & குழுவினர் நடிக்கும்

'காதல் கல்யாணம்'

நாடகம் நடைபெறும்

டிக்கட் கிடைக்குமிடம்:— அலமேலு அப்பாதுரை, 13, அருணாசல ஆசாரி தெரு, சேப்பாக்கம்

'காது! காது!' என்றால் 'நாதி! நாதி!' என்றார் மந்திரி ஷெட்டி

கேள்வி ஒன்றாக இருக்க பதில் மாறாக கூறியவிந்தை

சென்னை, மார்ச் 18—

"கடலூர் சர்க்கார் ஆஸ்பத்திரியில் 160 படுக்கைகள் இருக்கின்றன; 1952-ல், 9,396 நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது; தினசரி சராசரி 293 பேருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது,"

இவ்வாறு ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி அறிவித்தார்.

கன்னட மந்திரியான இவருக்குத் தமிழ் மொழி தெரியாது; எனவே, தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தமிழில் கேட்ட கேள்விகளை அர்த்தம் புரிந்து கொள்ளாமல் ஆங்கிலத்தில், சம்பந்தமில்லாத பதில்களின் விபரம் வருமாறு:—

ஏ கோவிந்தசாமி:— கட்டிட வசதியைப் பெருக்க முடியாததால், இட நெருக்கடியை முன்னிட்டு, காலியாக இருக்கும் இடத்தில் கீற்றுக் கொட்டகைகளைப் போட்டு, கயிற்றுக் கட்டிலில் நோயாளிகளை படுக்க வைக்க அரசாங்கம் வசதி செய்யுமா?

மந்திரி:— மேலும் 20 படுக்கைகள் போடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கோவிந்தசாமி:-ஏழை நோயாளிகளுக்கு 'பெனிசிலின்' போன்ற மருந்துகள் தரப்படுவதில்லையே என்ன காரணம்?

மந்திரி:—கெஜட் பதிவில்லாத ஊழியர்களுக்கு அந்த மருந்துகள் தரப்படுகின்றன. (சிரிப்பு)

கோவிந்தசாமி:— நான் கேட்கும் கேள்வி ஒன்று — மந்திரி கூறும் பதில்கள் வேறாக இருக்கிறதே? (சிரிப்பு)

சபாநாயகர்:— மந்திரிக்குத் தமிழ் தெரியாது.

கோவிந்தசாமி:—அருகிலுள்ள தமிழ் மந்திரி சொல்லித் தரலாமே!

மந்திரி:-'பெனிசிலின்'போன்ற அதிக விலையுயர்ந்த மருந்துகளைக் கொடுப்பதில் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்; தாராளமாகத் தந்தால் ஆபத்தானது; விலையுயர்ந்த மருந்துகளை யெல்லாம் ஏழைகளுக்கும் கொடுத்துவிட முடியாது.

கல்யாணசுந்தரம்: — வியாதியைக் கவனித்து மருந்து கொடுக்கப்படுகிறதா? அல்லது ஏழை, பணக்காரன் என்பதை அடிப்படையாகக் கொண்டு மருந்து தரப்படுகிறதா?

மந்திரி:— மருந்து வாங்க 8 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பழி வாங்கும்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இத்திட்டத்தால் பெரிதும் பாதிக்கப்படும்; ஆசிரிய வாழ்வே நாட்டு மக்களால் அலட்சியப்படுத்தப்படுகிறது; சர்க்காரும் நம்மை சரியாய் கவனிக்கவில்லை; ஆஜர் உயர்வால் நம் வாழ்வே பாதிக்கப்படுகிறது" என்றார்.

திரு. சண்முகம் அவர்கள் ஜேம்ஸ், ஜே. வியாகப்பன், பாபநாசம் முதலியவர்கள் திட்டத்தின் விளைவுகளைப் பற்றிக் கூறி முடிவுகாண சீக்கிரத்தில் ஏற்பாடு செய்தல் வேண்டும் என்றும், மானேஜர்கள் இது விஷயத்தில் ஆத்திரப்பட்டு ஆசிரியர்களை நீக்க முயல்வது கூடாதென்றும் கூறி முடித்தனர்.

தீர்மானங்கள்

இறுதியாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:—

ஆரம்ப ஆசிரியர்களுக்கு மத்திய கமிஷனால் நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

சராசரி ஆஜர் முன்போல் 20-ஆக இருத்தல் வேண்டும்.

உதவிச் சம்பளம் கொடுத்து, ஆசிரியப் பயிற்சி அளித்து வேலை பார்க்க ஆசிரியர்களிடம் உறுதி மொழி ஒப்பந்தப் பத்திரம் பெற்ற பின் வேலை செய்துவரும் ஆசிரியர்களை ஆஜர் அதிகரிப்பின் காரணமாய் விலகுதல் அறிக்கை அளித்து நீக்குவது மிகவும் வருந்தத்தக்கது.

பாருலேக்கர் கமிட்டி ரிப்போர்ட்டுகளின் சிபார்சுகளில் ஆசிரிய மாணவர் விகிதத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர இருப்பதைக் குறித்து வருத்தம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

பாடசாலைக்கு வெளியே மாணவர் செய்யும் வேலையை மேற்பார்வை செய்யும் பொறுப்பை எக்காரணம் கொண்டும் ஆசிரியர்கள் மேல் சுமத்தக் கூடாது.

மாணவர் ஆஜரை அதிகரிக்க அரசாங்கம் சட்ட பூர்வமாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறது.

ஆரம்ப ஆசிரியர்களுக்கும், சட்டசபைகளுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க ஓட்டுரிமை அளிக்கப்பட வேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்களை, தேர்தலில் வெற்றிபெற்றால் உயர்தரப் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களைப்போல பதவி வகிக்கலாம் என்று விதியை மாற்றி அமைக்க அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

வெங்கட்ராம ஐயர் வழக்கு

—:o:—

சுப்ரீம் கோர்ட்டில் விவாதம்

புதுடில்லி, மார்ச் 17—

விசாரணைக் கமிஷனர் அறிக்கையின் மீது எஸ். ஏ. வெங்கட்ராமனை 'டிஸ்மிஸ்' செய்தது ஒழுங்கு நடவடிக்கையாகுமென்றும், அரசியல் சட்டம் 20 (2) பிரிவின் கீழ் குற்றத்திற்குத் தண்டனையாகாதென்றும் சுப்ரீம் கோர்ட்டில் அட்டர்னி-ஜெனரல் விவாதித்தார்.

மனுதாரின் வக்கீல் ஏ. கே. பாசுவின் விவாதத்திற்குப் பதிலளிக்கையில், பிராசிக்யூஷன் தண்டனைகளுக்காக ஒரு குற்றத்திற்கு எதிரி தண்டிக்கப்படவேண்டும், என்ற நோக்கத்துடன் அக்குற்றம் பற்றிய விசாரணை நடைபெறவேண்டும் என்று மேலும் கூறுகையில் தெரிவித்தார்.

மில்லில் கலவரம்

டாக்கா, மார்ச் 16—

ஆசியாவிலேயே மிகப் பெரிதான ஆதம்ஜீ சணல் மில்லில் ஏற்பட்ட ஒரு கலகத்தில் ... தொழிலாளர் கொல்லப்பட்ட... 34 பேருக்குக் காயம் ஏற்பட்டது; இந்த மில் நாராயண க... சில் இருக்கிறது.

இது சம்பந்தமாக 30 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். மில் பகுதியில் ஆயுதந்தாங்கிய போலீஸ் பாராவும் போடப்பட்டிருக்கிறது.

இஸ்ரேலில் பஸ் பிரயாணிகள் 12 பேரை ஜோர்டான் அரபுகள் சுட்டுக் கொன்றதாக இஸ்ரேல் தகவல்கள் கூறுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் ... தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., ... அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, ... நாராயண செட்டித் தெரு ... இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.